292

# கல்வி விளக்கம்.

களம்பூர்

ச. சுப்பிரமணியப் பிள்ளை

எழுதியது.

ஆரணி

அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

926.

இதன் ... Copyright. [ அணா 4

T
N26
121409

உ

ஓம் தத் ஸத்.

சிவஷண்முகன்றுணை.



# கல்வி விளக்கம்.

இது

களம்பூர்


## ச. சுப்பிரமணியப் பிள்ளை


எழுதியது.

---

களம்பூர்

ஸ்ரீமான் த. கு. கோவிந்தராஜு முதலியாரவர்களால்

பரிசோதிக்கப்பெற்றது.

---


ஆரணி:

அமெரிக்கன் ஆற்காட் மிஷன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

குரோதன௵ ]  1926.  [ விலை அணா 4

# முகவுரை

---

நண்பர்காள்! மனித உறுப்புகளில் சிரசே பிரதானம். அதில் கண்கள் எவ்வளவு சிறந்து விளங்குகின்றதோ அது போலமானிடவாழ்க்கைக்கு கல்வியேசிறப்புடையதல்லவா? நாம் பெரும்பான்மையும் கல்வியை அலக்ஷியம் செய்கின்றோம் அது யாதுகாரணமெனில் கல்வியினலடையும் பெருமையும் நம் தாய் பாஷை என்ற அபிமானமும் இல்லாததினுல் என்றே தெரிகிறது. அதினுல்தான் இந்த அரும் செல்வமாகிய கல்வியைக் கற்க விருப்பமில்லாதவர்களாகின்றோம். நம்மில் ஒவ்வொருவரும் கல்வியைக் கற்றவர்களை விரும்புகிறார்கள் கல்லாதவரை அலக்ஷியம் செய்கின்றார்கள். இதைப் பார்த்தால் புகழ், புண்ணியம், புருஷார்த்தத்தை இச்சிக்காதவர்கள் ஒருவருமில்லையே! ஆகையால், அவசியம் கல்வியைக் கற்றுக்கொள்வதே புகழ்

எந்தச் செல்வத்திலும் கல்விச் செல்வமொன்றே அழியாச்செல்வம். நாம் கல்விச் செல்வத்தை சரிவர கற்றபின் பிறரால் பதிக்கப்படுகின்றன தல்லாமலும் அழிந்துபோகுதலும் ஆகிய செல்வமாகிய செல்வத்தை சம்பாதிக்கலாம். கல்விச் செல்வமே சிறந்தது. நம் அனைவருக்கும் அறிவு

என்னும் பொருள் ஒன்று உண்டு. அந்தப் பொருளாகிய விளக்கை, கல்வியினால் தூண்டப்படுதல் வேண்டும். நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து, கல்வியினால் உண்டாகும் பயன் இன்னதென்று உணரலாகும். நாம் பண்டைக்காலத்தில் நடந்த விஷயங்களையும், இப்போது வெகு தூரத்தில் நடக்கின்ற விஷயங்களையும் எதனால் அறிகின்றோம்? அந்த அருஞ்செல்வமாகிய கல்வியினாலன்றோ? இவ்வித அருமைகளைத் தெரிவிக்கின்ற கல்வியை அலக்ஷியம் செய்வது அழகாகுமா? நாம் அதை அலக்ஷியம் செய்யாமல் அதை பிரகாசிக்கச் செய்தல் அன்றோ நன்றி.

கல்வி கற்றில்லாவிட்டால் ஏன் ஜீவிக்க முடியாது என்று கேட்கலாம். அதற்கு விடை கீழ் வருமாறு:—

எல்லா உறுப்புகளையும் உடைய ஒருவருக்கு கண்கள் இல்லாவிட்டால் அவர் என்ன சுகத்தை அடைகின்றார்? எல்லா உருப்புக்களும் இருந்தும் கண்கள் இல்லாததினால் என்ன பிரயோஜனம்? அதுபோல நமக்கு அறிவு இருந்தும் கல்வி யில்லாவிடில் எல்லா உறுப்புக்கள் இருந்தும் கண்கள் இல்லாதவருக்கு நாம் சமமாகின்றோம். அவருக்கு கண்கள் இருந்தால் எவ்வளவு பிரகாசமோ அதுபோல கல்வி யிருந்திட்டால் அதிக பிரகாசமே. அவருக்கு கண்கள் இருந்தால் எவ்வளவு பலன் தருமோ அதைவிட பதின் மடங்கு கல்வி பலன் தரும். இதனால் கல்வி கற்றிருத்தல் கற்க வேண்டுவது அவசியம் என்று புலப்படுகிறது.

“ ஒருமைக்கட்டான் கற்றகல்வி யொருவற்
கெழுமையுமே மாப் புடைத்து ”

என்ற திருவாக்கின்படி ஒரு பிறப்பில் கற்ற கல்வி எழு பிறப்பிலும் உதவும். இதனால் எச் செல்வத்திலும் சிறந்த நம் தாய் பாஷையாகிய தமிழைக் கற்க வேண்டுவது அவசியம். மேலும் அயல் நாட்டாரால் நன்கு மதிக்கப்படுகின்ற நம் தமிழ் மொழியை பிரகாசிக்கச்செய்து போற்றுதல் வேண்டும்.

(கடவுள் கருணை புரிவாராக)

உலகத்தில் ஆண்மக்களுக்கு கல்வியே அழகு. கல்வியில்லாத ஒருவன் எவ்வளவு மன்மத சொரூபமாயிருந்த போதிலும் அவனழகுடையவனாகமாட்டான். (கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவர்க்கு மாடல்ல மற்றயவை) என்ற நாயனார் வாக்கியப்படி பொன் முதலாகிய செல்வமெல்லாம் செல்வ மில்லை யென்றும் அழிவில்லாத செல்வம் கல்வி யொன்றே யென்றும் (கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத் திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்) கற்றோர்களுடைய முகத்திலிருப்பதே கண் என்றும் மற்றோர்களுடைய முகத்திலிருப்பது புண் என்றும் தெரிகிறது. ஆகையினால் ஒவ்வொரு ஆண்மக்களும் அவசியம் கல்விகற்க முயலுதல் வேண்டும். ஆகையால் இனியாகிலும் நாம் படிக்க முயலுதல் வீண் என்று காலங்கழிக்காது (கண்டதைப் படிக்க பண்டிதனாவான்) என்ற வாக்கியப்படி நிதமும் வீணே யிருக்கக்கூடிய காலத்தில் எதையாவது வாசித்துக்கொண்டிருக்கின் தனக்குத்தானே கல்வி மிகும். கல்வியை நாம் அதிகமாக அடையவேண்டிய விருப்ப மிருக்கின் அதற்குத் தகுந்தவாறு முயலின் (தெய்வத்தாலாகாதெனினு முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும்) என்றபடி தன்

முயற்சியினாலேயே கல்வியை அடையக்கூடும் ஆகையால் ஒவ்வொரு ஆண்மக்களும் அவ்வாறு கல்வியைக்கற்க முயலு வீர்களென்று நம்புகிறேன்.

(ஆண்டவன் அருள் செய்வாராக)

தங்கள் உண்மையுள்ள

S சுப்பிரமணியன்,

களம்பூர்.

---

# சிறப்புப்பாயிரம்.

---

வாழியூர் போர்டு ஸ்கூல்

ஸ்ரீமான் த. கு. கோவிந்தராஜுலு முதலியாரவர்களியற்றிய

(அகவற்பா.)

வருகநண்பீர் வருகவிருந்துண
பெருகுமுந்நீர் பரவைசூழுலகில்
குமரிவேங்கிடங் குணங்குடகெல்லை
தமரங்கொண்டு வமர்ந்து கிடந்த
தமிழெனுமாது தன்னுருக்கொண்டே
அமிழ்தினுமினிய அறமுதர்சுவையால்
நம்மனோர்க்களித்து அம்மையென்றாரவே
இம்மைமறுமை யிரண்டையும்விளக்கும்
கல்வியென்னுங் கரிசறுநூலாய்
சொல்வளந்தேர்ந்த சுகுணனென்நண்பன்
பல்பொருள்விளக்கும் பரிதியைபோல
நல்லருள்விளக்கும் நற்கருணீகர்
குலத்தின்பயனாய் குறையெனயிர்ந்தோர்க்
கலத்தைப்போக்கி அரும்பொருளுதவும்
சந்திரசேகரன் றனயனாய்த்தோன்றி
தந்தனன்செய்துதகுசுப்பிரமணியநாவலனே.

---

களம்பூர் பாரதப்பிரசங்க வித்வ ஸ்ரீமான்

க. செ. செல்லப்ப முதலியாரவர்களின் மாணவர்

களம்பூர் சைவத் திருவாளர்

ஸ்ரீமத் உ. சு. வடிவேலு உடையாரவர்களியற்றிய

அறுசீர் விருத்தம்

பாரார் கலிசூழ் மகிதலத்திற் பயன்மிக்கண்டந்தான்
நெறிபொலியும்
ஏரார் கல்வி விளக்கமெனும் இன்னூல்எழுதி
யீந்ததனற்
சீரார் கருணீகர்க் குலத்தோன் செம்மான்சுப்பிர
மணியனெனும்
பேரார்வோன் நற்களம்பூர்மாப் பெற்றோர்க்கற்றோர்க்
கினியோனே.

---

# விநாயகர் தோத்திரம்.

திருச்சிற்றம்பலம்.

## விநாயகர்.

அகரமென அறிவாகி யுலகம் எங்கும்
அமர்ந்து அகரவுகர மகாரங்கள் தம்மாற்
பகருமொரு முதலாகி வேறுமாகிப்
பலவேறு திருமேனி தரித்துக்கொண்டு

புகரில்பொரு ளுன்கிளையு மிடர்தீர்ந்தெய்தப்
போற்றுநருக் கறகருணை புரிந்தல்லார்க்கு
நகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்துவாழ்வாம்.

காட்டுவழி போனாலும கள்ளர்பயமானாலும்
கேட்டுவழிகாரனல் கிட்டிடினும்—நாட்டமுடன்
நம்பிக்கை உண்டே நமக்கொரு விநாயகனார்
தும்பிக்கை உண்டே துணை.

## வேதாகம தோத்திரம்.

வேதம்பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓதும்தமிழ் அதனினுள்ளுருநெய் – போதமிகு
நெய்யினுருசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்

## தமிழின் பெருமை.

தொண்டர்நாதனைத் தூதிடைவிடுத்ததும்முதலை
உண்டபாலனை அழைத்ததும் எலும்புபெண்ணுருவாக்
கண்டதும்மறைக் கதவினைத்திறந்ததும்கன்னித்
தண்தமிழ்ச்சொலோ மறுபுலச்சொற்களோ சாற்றீர்

எல்லாம் வல்ல சிவபெருமான் வசந்தருதுவில், உமா தேவியாரோடு, உத்தியான வனத்திலோர் மண்டபத்தி லெழுந்தருளி யிருக்க, அம்மண்டபத்தில் சித்திரித்திருந்த

பிரணவாகாரமான இரண்டு யானைகள் தம் தம் துதிக்கைகளைப் புணர்தல் போல் பின்னினவைகளாயிருத்தலைக்கண்டு உமை சந்தோஷித்து ஈஸ்வரனிடங் கூற அவரின் பார்வையினால், அச்சித்திரத்தி னின்றும் யானைமுகமும் சதுர்ப் புயங்களும் குடவயிறும் குறுகிய காலுங் கொண்டு திருவவதாரஞ் செய்தருளிய யானைமுகா! உம்மை நமஸ்கரிக்கின்றேன்

## திருவாய் மொழி.

யானும் தானா யொழிந்தானை
　　யாதும் எவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனும்
　　ஆகிப்பணைத்த தனிமுதலை
தேனும் பாலும் கன்னலும்
　　அமுதுமாகித் தித்தித்தென்
ஊனில் உயிரில் உணர்வினில்
　　நின்ற வொன்றை யுணர்ந்தேனே.

# நூற்பெருமை.

தன்னைத்தானறிதல் வேண்டும்.

அன்புடையோரவர்களும் அறிவுற்றுகேழ்க்குமாறுவிருப்பம்

இனி என் விருத்தாந்தத்தைக் கவனிப்பீராக.

(1) நானே சொல்லுகிறேன் வலியந்த நன்மையைத் தள்ளுவது மதியாகாதன்றோ ? கேள்வி முயல் என்ற கட்டளைப்படி நீங்களே வலிதிற் சென்று பெரியாரை யடுத்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் கோடானுகோடியுண்டு. ஆப்படியிருப்பதால் நல்ல துரைக்க வந்த என்னை நாடுங்கள. நாடி யடையவேண்டிய பயனை யடையுங்கள்? இந்தச் சரித்திரம் உங்கள் நினைவிலே—என்றும் நிலைபேருடையதாயிருக்கத் தகுந்தது. இதனால் உங்கட்கு விளையும் நன்மை மிகுதியுண்டு

---

தன்னையறிவது தத்துவ ஞானம். ஞானமும் இரண்டுவகையே. பரோட்ச ஞானமென்றும், அபரோட்ச ஞானமென்றும். பரோட்ச ஞானமென்றால் பேதார்த்தத்தை யறிவது. அபரோட்ச ஞானயென்றால் பிரமத்தையறிவது. புத்தகம் என்றது ஒரு பொருளைக் குறித்த பல சொற்களில் ஒரு பெயர்ச்சொல்.

(1) சாத்திரப் பிரபஞ்ச மென்றும், அசாத்திரப் பிரபஞ்சமென்றும் இரண்டுள்ளது. சாத்திரப் பிரபஞ்சத்தில் உள்ளது சச்சிதானந்தம் ! அசாத்திரப் பிரபஞ்சத்தில் உள்ளது மண், பொன், பெண் முப்பொருள். சாத்திரத்தை அண்டினோர்கள் துக்கத்தைக் கடக்கிறார்கள். அசாத்திரத்தை யண்டியவர்கள் பிறப்பை யடைகிறார்கள். சாத்திரம் தாயைப்போன்றது.

(2) முன் ஜன்மத்தில் நான் ஒலிவடிவாயிருந்தேன். இந்த ஜன்மத்தில் வரிவடிவம் பெற்று வந்திருக்கின்றேன். அவ்வாறு வந்திருக்கும் நான் உங்களுக்கு அருந் துணைவனு யிருந்து அழியாத பெரும் புகழை விளைவித்து அது காரண மாக உயர்வு பெற்று உலாவுகின்றேன். கிழமைப்படவாழ் ப்டுபெறநில். தக்கோனெனத்திரி என்னுங் கட்டளைகளை நோக்கின் ஜன்மமெடுத்த ஒருவன் எல்லோராலும் புகழத் தக்க நிலையினை யடைதல் வேண்டுமென்பது பெறப்படுகிற தல்லவா? அப்படி உயர்வான நிலையைப் யடைய வேண்டிய ஒருவன் செய்வது யாது? எல்லோருக்கும் பயன்றரும் நல்லவழியிலே உழைப்பதையல்லது வேருண்டோ? இல் லையென்பது திண்ணமாக ஒருவர்க்கும் பயன்படாத வழியிலே உழைப்பவனின் பிறப்பும் ஒரு பிறப்பாமா? அது; "கருது தாயு தாமும் பார்க்கின்றபேர்களிநகண்க ளும் செய்தவினை" ப்பயனுகவன்றே முடியும்? "உத்தம குணத்தோடொருமகனுதிப்பின் முத்தாதலமும் முக மலர்ந்துய்யும்" என்னும் முதுமொழி நீங்கள் கேட்டதில்லை யா? ஆதலின் நான் அவ்வழியில் நிற்க முயல்வானுயினேன் ஒலிவடிவினின்றும் வரிவடிவாயுதித்த என்னுலுங்கட்கு வரும் பயன் யாதென்று நீங்கள் சந்தேகிக்கலாம், அச் சந் தேகத்தை இதோ நிவர்த்திக்கின்றேன்

(3) நீங்கள் இவ்வுலகத்திலே வாழ்ந்து வருமளவும்

---

(2) வீதியில் விளையாடும் பிள்ளையை யெடுத்து ஸ்தானபானம் கொடுத்து உபசரிக்கிற தாயைப்போல! வேதமாதாவானவள் இந் திரிய வாயிலாக சென்று விஷயங்கள் என்ற வீதியில் விளையாடுகிற மனது என்ற குழந்தையை அன்பாக அழைக்கிருள்.

(3) மனது அடையும் சுகம் இரண்டே! அதுவும் சிற்றின்ப

தேகசுகத்தையும் ஆத்ம சுகத்தையும் கருதி நடக்கவேண்டியவர்களாயிருக்கின்றீர்கள் அப்படிப்பட்ட நீங்கள் தேக சுகத்தையும் ஆத்ம சுகத்தையும் போற்றுவதற்குச் செய்ய வேண்டியதென்ன?

(4) லௌகிக பாரமார்த்திக விவகாரங்களிலே தங்களறிவை யபிவிர்த்தி செய்துகொண்ட பெரியோர்கள் தங்கள் அனுபவத்திலே கண்ட உண்மை விஷயங்களை நீங்களும் உணர்ந்து அவற்றைப் பின்பற்றவேண்டியதே நீங்கள் செய்யத்தக்கதாகும் இதர்க்கு என்னுடைய துணை இன்றியமையாததாகும் உங்களுக்கு நிலையான துணை என்னையன்றி யெவருமிலர் என்பதையும் நம்புங்கள்.

(5) எனது தாய் தந்தையருடன் நீங்கள் நேரே பழகியிருக்கமாட்டீர்கள்! ஆனால் அவர்களுடைய கருத்தின் மயமாக வந்த என்னுடன் நீங்கள் ஐக்கியப்பட்டிருப்பது உங்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கக் கூடியதாம்.

---

மென்றும், பேரின்ப மென்றும் சொல்லுவார்கள். சிற்றின்பம் உலகத்தில் உள்ளது. பேரின்பம் பாத்தில் உள்ளது.

(4) இகத்தில்உள்ள சிற்றின்பத்தை யடையவும், பாத்தில்உள்ள பேரின்பத்தை யடையவும் அறிவு ஒழுக்கம் வேண்டும். அதைக் கொடுக்க வல்லது புத்தகமே.

(5) அகண்டாகார அன்னையையும் சர்வசாக்ஷியான தந்தையையும் அறியீர்கள் உங்களை அவரிருவரையும் காணச் செய்வதற்கு நான் துணை.

(6) தாழ்ந்த நிலைமையிலுள்ளவரும் பூர்வகால தற்கால மேதாவியரின் ஞானத்தை யநுஸரித்ததும் சிறந்ததுமான அபிப்ருயங்களுடன் கலந்து வாழ நேரிடுவதும் என்னாலே தான்

(7) என்னை மேல் நோக்காய் நேசித்தவர்களை நீங்கள் நம்பித் துணைகொள்ளவேண்டாம். அவர்கள் உங்களுக்கு உற்றதுணையாகமாட்டார்கள். அத்துணை உங்களுக்கு மண் குதிரையை நம்பி ஆற்றிலிரங்கியதுபோலாகும்.

(8) உங்களுடைய ஓய்வுநாட்களிலும் ஆபத்துக் காலங்களிலும் உங்களுடனிருந்து உங்களுக்கு அறிவூட்ட வல்லவன் நான்தான்.

(9) என்னை நீங்கள் திருப்பித்திருப்பி பார்த்தீர்களானால் நீங்கள் உங்கள் மனத்திலே கோரும் விஷயங்களெல்லாம் என்னிடத்திலிருந்து வெட்ட வெட்ட ஊறும் கிணறு போலே வேறு ஊன்றிக்கொண்டேவரும்.

---

(6) என்னை துணையாய்க்கொண்டு தான் முற்காலத்திலும் தற்காலத்திலும் என் தாய் தந்தையரைக் கண்டு சுகமுற்றிருக்கும், பெரியோர்களானார்கள்.

(7) சிரத்தாபத்தியின்றி என்னை துணைகொண்டவர்கள் அவர்கள் இஷ்டசித்தியைப் பெறுவதில்லை.

(8) சிரத்தாபத்தியுடன் ஒரு நாழியாகிலும் என்னை துணையாய்க் கொள்ளுங்கள்! உங்கள் துக்கத்தை ஒழிப்பேன்.

(9) நல்லோர் சிநேகம் விருத்தியாவதுபோல என்னுடைய உதவியால் உங்கள் அறிவு விசுருந்தியடையும்.

(10) வீட்டிர்க்குரிய விலையுயர்ந்த சாமான்களையும், தளங்கட்கேற்ற வேலைப்பாடுள்ள சமுக்காளங்களையும் நீங்கள் சேகரித்துக்கொள்ளலாம். என்னுடைய உதவியால் உங்கள் வீட்டிர்க்கு அவசியமானவற்றையெல்லாம் தேடிக் கொண்டபிறகாவது உங்கள் ஆத்மார்த்தமான விஷயத்தில் அபிவிர்த்தியடைய என்னை முற்றும் நீங்கள் விசுவாசிக்க வேண்டாமா?

(11) என்னோடு பழகி என்னுடனிருப்பவர்கட்கு நான் மன உற்சாகத்தையும் நற்குணத்தையும் பெருந் தன்மையையும் இயற்கைப்பொருளைக்கண்டு ஆநந்திக்கும் திறமை முதலிய நன்மைகளையுஞ் செய்கின்றேன் இப்படிநான் செய்வது உலகுக்கு ஒரு மலைவிளக்கைப்போல் விளங்குவதேயெனினும். கண்ணிருந்தும் குருடர்போல உலாவும் மநிஷினர்கள் இதை யறிவதில்லை.

(12) என்னுடன் பழகி என்னை நன்றாயறிந்தவர்களே முகத்தில் கண்ணுடையவராகப்புகழ்படுகின்றனர். அப்படிப் பழகாதார் முகத்திரண்டு புண்ணுடையர் என்று இகழப்

---

(10) அறிவுடைய உங்களை அரசனும் விரும்புவான்! வேண்டிய ஆடை ஆகாரம் ஆபாரணமு முதவுவான்! இதற்காகிலும் என்னை நேசியுங்கள்!

(11) இப்படி உபகாரஞ் செய்கிற என்னை அவமதித்து அந்தகன் என்றபேர் எடுக்காதீர்கள்!

(12) முகத்தினுடைய கண் தூலப்பொருளையே அறியும்!

படுகின்றனர் இதனையறிபவர்களே என்னை நண்பனாகக்கண்டு வாழ்விலே மேன்மையடையும் படியான நல்லவழியிலே நடக்கின்றனர் கண்ணிருந்தால்தானே நல்லவழி கெட்ட வழி என்பது தெரியும்.

(13) பணமென்கிற செல்வத்தைவிட நான் கொடுக்கும் கல்விச் செல்வம் கைவந்தவர்கள் எக்காலத்தும் தாழ்வடைவதில்லை இது கேடில்விழுச்செல்வம் ஆகும். பணச்செல்வம் குன்றத்தக்கது. அதுபோலவே அதனையடையப் பெற்றாரும் குன்றுவர். ஒருகாலத்திலே அது நிலைப்பதில்லை ஓரிடத்தில் அதனையுடையவர் பகைவர்க்கு அஞ்சவேண்டும் கல்விச் செல்வமுடையவர்களுக்குப் பகைவர்களால் பயமில்லை. அதனை ஒருவராலும் கொள்ளைக்கொள்ளமுடியாது. இச்செல்வம் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கப் பெருகும் இதனால் என்னுடைய அருமையுணர்ந்தவர்கள் என்னைப் பணப்பெட்டியைக்காப்பது போலக் காத்துவருகின்றனர்.

(14) நான் என்னோடு பழகி என்னை விசாரிப்பவர்களுக்கு பல நாட்களுக்கு முன் நடந்த விஷயங்களையும் நூற்

---

அகத்திலுள்ள என் சொரூபமான கண் சூட்சுமப்பொருளாகிய சித்தையும் அறியும்..

(13) பொருட்செல்வம் மோகத்தை உண்டுபண்ணும்! நான் கொடுக்கும் கல்விச்செல்வம் யோகத்தை உண்டுபண்ணும்! பொருளால் பயமுண்டு, கல்வியால் அருளுண்டு; இதைக்கருதியாகிலும் என்னை விசுவாசியுங்கள்!

(14) என்னை நேசித்தவர் சமீபத்திலுள்ள சீவாத்மாவை

ருண்டுகளுக்கு முன் நடந்த விஷயங்களையும், சிறிது நேரத்திலே காட்டித்தருகின்றேன். அந்நியதேசங்களின் சரித்திரங்களையும் அத்தேயத்தவர்களின் நடையுடைபாவனைகளையும் அவர்களின் மேன்மையையும் மேன்மையடைந்ததின் காரணத்தையும் விளக்குகின்றேன்.

(15) என்னோடு பழகப்பழக அறிவு விருத்தியாகும், அறிவுவிருத்தியாகவே ஒழுக்கஞ் சிறந்து நிற்கும; ஒழுக்கம் சிறக்குமாயின் அது மேன்மையை உண்டாக்கும்.

"ஒழுக்கம் விழுப்பந்தாலால்
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"

என்பது ஞாஞசிரியர் திருவாக்கன்ரே?

(16) என்போல் பலருட்சிலர் பாகுபோன்று சுவைக்கக்கூடியவராயிருக்கின்றனர், சிலர் சாறுபோல் பருகததக்கவரு யிருக்கின்றனர்; சிலர் கற்கண்டுபோல் மென்றுத்தின்று ஜீரணித்துக்கொள்வதர்க்கு யோக்கியருயிருக்கின்றனா.

---

யும், தூரத்திலுள்ள பரமாத்மாவையும் அறிகிருர்! அஃதல்லாமல் சமீபத்திலுள்ள விஷயங்களையும், தூரத்திலுள்ள வர்த்தமானத் த யும் தெரிகிருர்.

(15) என்னோடு நட்பரனவர்கள் காருண்ணிய முதலிய நற்செய்கையால் சாந்தி யடைகிருர்கள்!

(16) என்னுடன் பிறந்தவர்கள் இரண்டுபேருண்டு! அவருள் ஒருவர் ஞானத்தைப்பற்றியும் ஒருவர் உபாசனையைப்பற்றியும் சொல்லுவார்! நான்கருமத்தைப்பற்றியே உங்களுக்குச் சொல்லுவேன் என்னை நேசியாத நீங்கள் அவர்களை விசுவாசிக்க முடியாது.

(17) உங்களுடைய பிறப்பையொத்தது எனது முகவுரை; உங்களுடைய பேச்சுகளும் கூக்குரலும் என் வாசக ஏடுகள்; குழந்தைப்பருவமும் யௌவனப்பருவமும் எனது பொருளடக்கங்களாம்; வாழ்நாளும் நடவடிக்கைகளும் என்னுடைய விஷயங்கள்; தீச்செயல்களும் தவறுதல்களும் என்னிடத்திலுண்டாகும் எழுத்துப்பிழைகளாம்; திருத்தங்கள் என்மீதுறும் அநுதாபங்களாம்.

(18) உங்களிலே சிலர் உருவம், அழகு நடையுடை முதலியவற்றில் வேறுபாடுடையவர்களாயிருக்கின்றீர்களல்லவா? அதுபோலவே என்னிற் சிலர் உருவத்திலேபருத்தும், சிலர் சிறுத்தும், சிலர் நேர்த்தியாய் அலங்கரிக்கப்பெற்றும் சிலர் அலங்காரம் பெறாமலும் காணப்படுவர்.

(19) உங்களிலே சிறந்தவன் அல்லது பெரியவன்யார் என்று உங்களைக்கேட்டால் நீங்கள் என்ன விடை பகர்வீர்கள்? எவன் நல்லொழுக்கத்தோடு கூடியிருக்கின்றானோ அவனே சிறந்தவன், அவனே பெரியவன் என்று கூறுவீர்கள் இல்லையா? அந்த நல்லொழுக்கமயமாயிருப்பதற்கு

---

(17) நீங்கள் பிறப்பதும் கர்மபூமியிலேயே! நீங்கள் செய்வதும் தர்மத்தையே! அதிலும் சத்கருமத்துக்கு ஏது நானே!

(18) உங்கள் இனத்திலும், உருவம் நிற முதலிய வற்றில் பேதமுண்டு! என் இனத்திலும் பெரியது சிறியது என்று உண்டு! உங்கள் இனத்திலும் தன்னையறிந்தவனும் தருமம் செய்கிறவனும் எப்படி சிறப்புடையவனோ அதுபோல என்னினத்திலும் சுருங்கச்சொன்னாலும் விளங்க வைக்கிறவர்களே பெரியவனாகும்.

(19) அந்த விளக்கத்தால் மைத்திருதி குணமுடையவனாகிறீர்

அநுகூலமானவன் யானே என்பதை நீங்கள் கவனிக்கக்கடவீர்கள். நல்ல ஒழுக்க முடையவன் யாவன்? தன்னுயிர் போல மன்னுயிரை நேசிப்பவனே நல்ல ஒழுக்கத்தவனவன் அந்தப்பாக்யத்தை அளிப்பவன் நான்றான்! அப்படிப்பட்ட என்னை நீங்கள் மறக்கலாமா?

(20) எவன் தன்வாழ்நாளை என்னிடத்திலே செலுத்துகின்றானோ அவனே தன் நலத்தையும் தன்நேசநலத்தையுங் கருதி நடக்கும் உத்தமனவான். அப்படித்தன்வாழ்நாளைச் செலுத்தாதவன் உலகத்திலே தனக்கு வேண்டிய நன்மைகளைப் பெறமற்போவதோடு பெருமையடையமாட்டான்.

(21) என்னிடத்திலே நீங்கள் காணும் உயர்ந்த கருத்துகளை நீங்கள் மாறகக்கிரகித்துக்கொண்டால் அது கண்டு நான் உங்களைப்பரிகசிப்பதில்லை என்னை எவ்வளவுக்கெவ்வளவு உயர்வு படுத்துகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு நீங்களும் உயர்வையடைவீர்கள்.

(22) நான் என்னை தன்னுடைய நண்பனென்று அறி

---

கள்! இதைக்கருதியாகிலும் என்னை மறக்காதீர்கள்!

(20) என்னைமறந்து தனது வாழ்நாளில் வீணில் கழிக்கிறவர்கள் தாயினுடைய எவ்வர்ணத்தை குறைப்பதற்காகவே பிறந்தவர்கள்!

(21) நான் உங்களுக்குத் தெரிவிக்கவந்தது! அறம், பொருள், இன்பம் என்ற கவுணர்த்தமும், பீடு என்ற முக்கியார்த்தமுமேயாம்!

(22) இதையடையாத நீங்கள் அவித்தைமுதலாகிய நரகத்தில்

ந்து என்னோடு நட்புச்செய்பவனுக்கு ஏற்படும் துக்கத்தைப் போக்கி மென்மேலும் சந்தோஷத்தைக் கொடுக்கின்றேன் என்னோடு பழகுகிரவனுக்கு வேண்டிய நன்னடக்கைகளை நான்போதிக்கிறேன் வயோதிகனாயின் அவன் தன்காலத்தை இனிமையாகக் கழிக்கும்படி செய்கிறேன் தனித்திருப்ப தால் உண்டாகும் கஷ்டத்தை நீக்குகின்றேன்?

(23) நானில்லாத அறையை உயிரில்லாத உடலுக்குச் சமானமாக நினைப்பர் விவேகிகள் என்னோடு பழகி என்னை புணர்ந்தவன் சிறுவனே யெனினும், அவனை யுலகம் வயதிற் பெரியருய் அநுபவ முதிர்ந்தவருய் எல்லோராலும் மதிக் கப்படும் ஒருவரை விட மேன்மைப்படுத்தும் சிறுவனேயல் லாமல் கீழ்க்குலத்தவனை விருப்பினும் அவனுக்குப் பெரு மைகுறையாது.

(24) நான் வதிந்துள்ள புஸ்தகசாலையிலே போய் ஒரு வன் தன்காலத்தை கழிப்பானாயின் அவன் உள்ளம் அந்த வாழ்க்கையைவிட ஸ்வர்க்கலோக வாழ்க்கைமேலென விரும்பாது!

---

உழலுவீர்கள்! அதை அடைவீர்களானல் பரமானந்த முற்று வாழ் வீர்கள்!

(23) நானில்லாத ஸ்தானமும் உயிரில்லா உடம்பு என்றேமதி யுங்கள்! என்னுடைய நட்பு இல்லான் துக்கி என்றே தெளியுங்கள்!

(24) நான் வாழும் இடம் சத்தியலோகத்தைப் போன்றது! என்னுடன் நேசித்தவர் நித்திய திருப்தியுடையவர்!

(25) என்னருமை தெரிந்த பேரறிவாளிகளாகிய தனவான்கள் என்னை ஏழைகள் எல்லோரும் எளிதிலேயடைந்து பழகும்படியாய் ஏராளமான பொருட் செலவுசெய்து புஸ்தகசாலை கட்டிவித்து வருகின்றார்கள்.

(26) என்னுடைய அருமையான உதவியை நன்றாய்ப் பெறாதவன் தன்னுடைய முப்பதாவது வயதில் தன்னை அறிவீனன் என்று சந்தேகிக்கின்றான் நாற்பதாவது வயதில் அறிவீனத்தை உள்ளபடி உணர்கின்றான்; பின் தன் ஒழுக்கத்தை திருத்தத்தொடங்குகின்றான்! ஐம்பதில் அவமதிப்பான தனது அஜாக்கிரதையைக் கண்டிக்கத்துணிந்து நல்லொழுக்கத்திலே பிரவேசித்து மரிக்கின்றான்.

(27) என்னைமுற்றும் விசுவாசியாதவன் துர்மாணத்தையடைகின்றான், விசுவாசித்தவன் யாதொரு தீங்கின்றிச் சுகஜீவியாயிருந்து மரணமடைந்து நித்யானந்தப்பேற்றைப் பெருகின்றான்.

---

(25) என்னுடைய நல்வரவை விரும்பிய திருவாளர் கலாசாலை முதலிய இடங்களில் என்னைப்பிரகாசிக்கப்படுத்துகிறார்!

(26) என்னுடைய உதவியை முற்றும் பெறாதவர் சாமாணத்தையடைந்து அழிகிறார்கள்!

(27) என்னை உண்டு என்று நினையாதவர்கள் அகாலமரணத்தையும் அச்சிறுதி மார்க்கத்தையும் அடைகிறார்கள்!

## என்னைப்பற்றிப் பிறர் கூறுவதையுங் கவனியுங்கள்

### அடிசன் கூறுகின்றார் (Addison)

(1) மாணசாதனப் பொருள்களாயுள்ளது புஸ்தகமே யாம், இது பிரசித்திபெற்ற கலைவாணரால் நமக்கு அளிக்கப் பெற்றது. தலைமுறை தலைமுறையாய் இனி பிறக்கப் போகின்றவர்களின் சந்ததிக்கும் பரிசாகுமாறு தரப்பெற் றது.

### கார்லைல் கூறுகின்றார் (Carlyle)

(2) மனிதர் உண்டுபண்ணக்கூடிய சகலவஸ்துக்களி லும் சிறந்தது புஸ்தகந்தான்! இன்றியமையாததுமிது தான்! ஆச்சரியமானதுமிதுதான்! உரிமையாகத்தந்தது மிதுதான்!

### ஸிஸரோ கூறுகின்றார் (Cicero)

(3) சிறுவர்கட்கு ஆகாரம்போன்றது புஸ்தகம்! விருத் தர்களுக்கு மனோகரமானது; வாழ்விற்கு அலங்காரமானது; கைக்கு அணிகலமானது புஸ்தகம் அஸ்தபூஷணம் ஆபத்து நேர்ந்தகாலத்தில் தேறுதல்கூறும் அரிய நண்பனைப்போன் றது புஸ்தகம்! ஆதாரவானதுமதுதான்; வீட்டிலுள்ளபோது உற்சாகத்தையூட்டவல்லது அதுதான், தடையற்றதுமாய் இராக்காலங்களிலும் சுதேசத்திலும் பிரயாணத்திலும் இது தான் அருஞ்சகாயமாய்நிற்பது.

### எமர்ஸன் சொல்லுகின்றார் (Emerson)

(4) பெரியோர்களுடைய அரிய பெரிய செயல்களி

லுண்டாகிற நன்மைகளை நாமடையத் துணையாயிருப்பது புஸ்தகமாகையினால் அதனை நாம் கைவிடாமல் காப்பாற்ற வேண்டும்.

ஸர் ஆர்தர் ஹெல்ப்ஸ் (Sir Arthur helps)

(5) படிக்கும்போது திருத்தமான சொற்களாகிய கருத்துக்களையும், ஞானவர்களுடைய சிறந்த போதனைகளையும், நாம் நமது மனத்திலே பதியவைப்பதற்கு ஆதாரமானதும் புஸ்தகமேயாம். இவ்வாறு பதியவைப்பதால் ஜீவியமான அறிவின் பொக்கிஷத்தை நாம் அபிவிர்த்திசெய்யும்படி செய்வதும் புஸ்தகமேயாம். அந்தப் பொக்கிஷத்தினின்றும் எல்லாக்காலங்களிலும் (ஆபத்து நேர்ந்தகாலத்தும்) வேண்டிய ஆறுதல், புத்திமதி, அநுதாபம் என்பவற்றைக்கிரகிக்கத் தக்க சக்தியையளிப்பதும் புஸ்தகமேயாம்.

புலவரொருவர் கூறுகிறார்

(6) சில புஸ்தகங்களின் சுவையைமட்டும் காணவேண்டும். சில புஸ்தகங்களைப் பற்படாமல் விழுங்கவேண்டும் சில புஸ்தகங்களைக் கடித்து மென்று உள்ளே செலுத்த வேண்டும்.

(7) வித்தை மாதாவைப்போல் காப்பாற்றுகின்றது ; பிதாவைப்போல் புத்தியைக் கற்பிக்கின்றது ; காந்தையைப்போல் களிப்பூட்டுகின்றது ; சர்வ துக்கத்தையும் நிவர்த்தி செய்கின்றது ; திசைகளில் கீர்த்தியைப் பரவச் செய்கின்றது ; கற்பக விருக்ஷத்தைப்போல் வித்தை எதைதான் கொடுக்கமாட்டாது ?

(8) வித்தை மனிதனுக்குஅழகைக் கொடுக்கின்றது; அது மறைத்துவைக்கப்பட்ட புதையலுக்குச் சமானமாம்; போகத்தைக் கொடுப்பதாம், கீர்த்தியையும், சுகத்தையும் கொடுக்கின்றது; அந்நிய தேசங்களுக்குச் செல்லும் போது பந்துக்களுக்குச் சமானமாகின்றது, அரசர்களால் பூஜிக்கப்படுகின்றது, வித்தை யில்லாதவன் பசுவிற்குச் சமானமாம்!

## கல்வி.

1 கற்கக்கசடறக் கற்பவைகற்பின்
நிற்பவதற்குத்தக

2 தொட்டனைத்தூறு மணற்கேணிமாந்தர்க்குக்
கற்றனைத்தூறுமறிவு

3 கற்றதனாயபயனென்சொல்வாலறிவ
னற்றாடொழ அரெனின்

4 எண்ணென்பவேனை யெழுத்தென்பவிவ்விரண்டும்
கண்ணென்பவாழு முயிர்க்கு

5 கண்ணுடையரென்பர் கற்றோர்முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்

6 யாதானுநாடாமாலூராமா லென்னொருவன்
சாந்துணையுங்கல்லாதவாறு

7 கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட்பிறந்த பதராகும்மே

8 நாற்பாற் குலத்தில் மேற்பாலொருவன்
கற்றிலனுமகிக் கீழிருப்பவனே

9 எக்குடிபிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற்சற்றோரைவருகவென்பர் (திருக்குறள்)

10 பத்துத்திசையும் பரந்தகடலுலகும்
ஒத்தெங்கும் நிற்குஞ்சிவம்

11 விண்ணிறைந்துநின்றுவிளங்குஞ் சுடரொளிபோல்
உண்ணிறைந்து நிற்குஞ்சிவம்

12 ஆகமுஞ் சிவனு மாசையுந்தானுகி
ஏகமாய் நிற்குஞ்சிவம்

13 உருவமொன்றில்லை உணர்வில்லை யோதும்
அருவமுந் தானதுவேயாம். (ஔவைக்குறள்)

## வேறு

1 குஞ்சியழகுங் கொடுத்தானைக் கோட்டுமுத
மஞ்சனழகுமழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாமென்னு நடுவு நிலைமையாற்
கல்வியழகேயழகு

2 இம்மைபயக்கு மாலீயக் குறைவின்றால்
தம்மைவிளக்குமாற்றா முளராக்கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேன்கல்விபோன்
மம்மாணுக்கு மருந்து

3 வைப்புழிக்கோட்படவாய்த்தீயிற்கேடில்லை
மிக்க சிறப்பினரசர் செறின்வவ்வார்
எச்சமெனவொருவன் மக்கட்டுச் செய்வன
விச்சைமற்றல்ல பிற

4 கல்விகரையிற் கற்பவர்நாள்சில
மெல்லநினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந்தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குறுகிற்றெரிந்து

5 பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந் துனக்கு நான்றருவேன்—கோலஞ்செய்
துங்கக்கரிமுகத்துத் துவமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந்தா

6 புண்ணியமாம்பாவம்போம் போனநாட் செய்தவவை.
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்-எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத்தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல்

படிப்பதற்கு மாத்திரமன்றிப் படித்தபடியே நடப்பதற்கும பிரயாசைப் படவேண்டும் நன்னடையில்லாத போது கல்வியினாலே பிரயோசனம் இல்லை நமக்கு உயிர்த் துணையாகிய கடவுளை ஒருபோதும்மறவாதே.

"நின்று மிருந்துங்கிடந்து நடந்துநினை
என்றுஞ் சிவனருளினை"

ஒருமை யுடனினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தமுறவுவேண்டும்
உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பேசுவா
ருறவுகலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ்பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்கவேண்டும்
மருவுபெண்ணாசையை மறக்கவேவேண்டு
முனை மறவா திருக்க வேண்டும்
நின்கருணை நிதிவேண்டு நோயற்ற
வாழ்வினால் வாழவேண்டும்
தருமமிகுசென்னையிற் கந்தகோட்டத்துள்வளர்
தலமோங்குகந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
துண்முகத் துய்யமணியே

ஆண்டவனு நீயாகி லுனக்கடியனு நானாகி
லருளுடையா யின்றிரவி லருளிறையாய்வந்து
நீண்டவனே முதலியருந் தீண்டரிதாம் பொருளின்
னிலைகாட்டி யடிமுடியி னெறிமுழுதுங்காட்டி
வீண்டவனே காலையினி விழித்தவுட னெழுந்து
விதிமுடித்துப் புரிதியிது விளங்குமெனப் புகல்வாய்
தாண்டவனே யருட்பொதுவிற் றனிமுதலே கருணைத்
தடங்கடலே நெடுந்தகையே சங்கரனே சிவனே.
(அருட்பா)

கண்ணேயக்கண்ணின்மணியே மணியில்கலந்து ஒளிசெய்
விண்ணேவியன் ஒற்றியூர் அண்ணல்வாமத்தில்வீற்றிருக்கும்

பெண்ணே மலைபெறும் பெண்மணியே தெய்வப்பெண்
[அமுதே
மண்ணே பநீத்தவர்வாழ்வே வடிவுடைமாணிக்கமே

எண்ணிய எண்ணங்கள் எல்லாம்பலிக்க எனக்குஉன் அருள்
பண்ணியஉள்ளங்கொள் உள்ளும் புறம்பும் பரிமளிக்கும்
புண்ணியமல்லிகைப்போதே எழில்ஒற்றிப் பூரணர்பால்
மண்ணியபச்சை மணியேவடிவுடை மாணிக்கமே.
(மாணிக்கமாலை)

இடையறுப்பேரன்பு மழைவாரும் இணைவிழியுமுழவாரத்தின்
படையறுத் திருக்கரமும் சிவபெருமான்திருவடிக்கே பதித்தநெஞ்சு
நடையறுப்பெருந்துறவும் வாகீசப்பெரும்தகைதன் ஞானப்பாடல்
தொடையறுச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்துவாழ்
[வாம் (அப்பர்)

வறந்திடு பொய்கை முன்னிறம்பமற்றவண்
உறைந்திடு முதலைவந்துதிப்பவன்னதால்
இறைந்திடு மகவளர்ந்தெய் தப்பாடலொன்று
அறைந்திடு சுந்தரனடிகள் போற்றுவாம் (சுந்தரர்)

பழுதிலாதசொல்மணி யிணைப்பத்திசெய்தன்பு
முழுதுமாகியவடத்தினால் முறைதொடுத்து அலங்கல்
அழுதுசாத்து மெய்யன்பருக்கு அகமகிழ்ந்து ஐயர்
வழுவிலாதபேர் மாணிக்கவாசகன்என்றார் (மணிவாசகர்)

பரசமயக் கோளரியைப் பாலருவாயனைப்பூம் பழனஞ்சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞானசம்பந்தப் பெருமானைத் தேயமெல்லாங்
குரவையிடத்தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தம் குலதீபத்தை

விரவி எமையாளுடைய வென்றிமழவிளங்களிற்றை விரும்பிவாழ்
[வாம் (திருஞானசம்பந்தர்)

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
திகழ்ஒளியைத்தேவர்கள் தங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக் கனலைக்காற்றைக்
கனைகடலைக்குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநாள்எல்லாம்பிறவாநாளே (திருத்தாண்டகம்)

வந்திறை அடியில்தாழும் வானவர் மகுடகோடி
பந்தியின் மணிகள்சிந்த வேத்திரப்படையால்தாக்கி
அந்தியும் பகலும் தொண்டர் அலகிடும் குப்பையாக்கி
நந்தியெம் பெருமான்பாத நகைமலர் முடிமேல் வைப்பாம்
(திருவிளையாடல்)

1. கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினும்
குளிர்தீம்புனல் கையள்ளிக்
கொள்ளுகினும் அந்நீரிடைத்து இளைத்தாடினும்
குளிர் சந்த வாடை மடவார்
வந்துலவுகின்றதென முன்றிலிடை உலவவே
வசதி பெறுபோதும் வெள்ளை
வட்டமதி பட்டப்பகல்போல நிலவுதா
மகிழ்போதும் வேலையமுதம்
விந்தைபெற அறுசுவையில் வந்ததென அமுதுண்
வேளையிலு மாலை கந்தம்
[ணும்

வெள்ளிலையடைக்காய் விரும்பி வேண்டியவண்ணம்
விளையாடி விழி துயிலினும்
சந்ததமும் நின்னருளை மறவா வரந்தந்து
தமியேனை ரட்சை புரிவாய்
சர்வ பரிபூரண அகண்ட தத்துவமான
சச்சிதானந்த சிவமே. (தாயுமானவர்)

2, ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்று
ஈசருடன் ஞானமொழி பேசு முகம் ஒன்று
கூறும் அடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்று
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்று
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்று
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்று
ஆறுமுகமான பொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணசலம் அமர்ந்த பெருமாளே
(திருப்புகழ்)

3. திகடசக்கர செம்முகமைந்துளான்
சகடசக்கரத் தாமரை நாயகன்
அகடசக்கர வின்மணியவுறை
விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.
(கந்தபுராணம்)

4. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலாவுலாவிய நீர்மலிவேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.
(பெரியபுராணம்

## சரஸ்வதி துதி.

1. வெள்ளைக் கலை உடுத்தி வெள்ளைப் பணி பூண்டு
வெள்ளைக்கமலத்தே வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடு என்னை
சரியாக வைத்த தாய்.

## சிவகாமசுந்தரி துதி.

2 பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமயவிருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றினொளி விளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுது செயத் [திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி.

## வள்ளியம்மை துதி.

3. மாதவனோர் மாதவனாய் மாதவம் செய்திடலும்
வனமானாய் வந்தெதிர்ந்த மலர்மானைப் புணரப்
பூதமங்கையர் உருவாய் அவதரித்து வள்ளிப்
பொருப்புறையும் பொருப்பர் மனை விருப்பமுடன் [வளர்ந்து
தீதகலும் தினைகாத்து வேங்கை உருவெடுத்த
செவ்வேளை அவ்வேளைச் சேர்ந்திரு கைக்கோளும்
காதலுடன் புரிந்து இறைவன் வலப்பாகத்து அம [ரும்
கன்னி எனும் வள்ளி கழல் உன்னி வழுத்திடுவாம்.

## தெய்வயானையம்மை துதி.

4. சங்கரிதன் பருமகளைச் சங்கு அரிதன் மகளைச்

சங்கரிக்குஞ் சங்கரனே மாமன் எனும் தையலேயை [யை
வெங்கரி தந்திடு பிடியை விண்ணவர்கோன் சுதை
விண்ணவர்கள் பணிந்து எத்தும் விண்ணுலகத்து-
[அணங்கைப்
பைங்கழுநீர் விழியாளைப் பைங்கழுநீர் நிறமே
படைத்தாளை பைங்கழுநீர் செங்காம்கொண்டாளைச்
செங்கமலை தரும் அமுதைக் கந்தரிடத்து அமருந்
தெய்வயானையைத் தொழுது திரு அருள் பெற்றிடு
[வாம்

5. ஒருமனதைச் சிதைவு செய்து வல்வழக்கிட்டு
[ஆள்கொண்ட அவனைக்கொண்டே
இருமனத்தைக் கொண்டருளி பணிகொண்ட
[வல்லாளன் எல்லாம் உய்யப்
பெருமணச்சீர் திருத்தொண்ட தொகை விரித்த
[பேர் அருளின் பெருமான் என்றும்
திருமணக்கோலப் பெருமான் மறைப்பெருமாள்
[எமது குலதெய்வமாமால்.
(காஞ்சிபுராணம்)

முற்றிற்று.

அமெரிக்கன் ஆற்காட் மிஷன் பிரஸ், ஆரணி.

# கவனிப்பு.

---

அன்பின் மிக்க ஆப்த மித்திரர்களே !

ஒவ் வொருவரும் அவாவர்களின் தொழிலிலேயே மனது வைத்து பக்தியிற்சிறந்து முக்தி பெருவதற்குரிய அரியபெரிய நூல்களைப் பார்த்து தேர்ச்சியடைய தொழிலே தடுப்பதாலும், இத் தொழில் முறையிலேயே சதா காலங்கடந்து வரினும் (பல நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி) ஆண்டவன் கட்டளைப்படி ஒவ்வொருவரும் சிறிது காலமாவது கல்விப்பயிற்சியில் ஈடுபட்டு நல்வழிக்கு வர வேண்டுமாறு அடியேனுடைய புத்திக்கு சிறிதளவு எட்டியவரையில் (இம்மை மறுமை இரண்டிற்கும் பயன்படுமாறு) இதுவான **கல்வி விளக்கம்** என்னும் இச்சிறு நூலை எழுதியுள்ளேனாதலால் இதனைக்கண்ணுறுமன்பர்கள் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து அடியேனை ஆதரிக்க வேண்டுமாறு கோறுகின்றனன்

இப்புத்தகம் வெளிவரக்கோரின நண்பர்கள்

ம-ா-ா-ஸ்ரீ M. S. கெங்காதரம் பிள்ளை.
,, K. S. முனிசாமி செட்டியார்
,, K. V. லோகய்ய செட்டியார்.

இங்ஙனம்,
S. சுப்பிரமணியன்,
களம்பூர்.